بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**இறைவனுக்கு நன்றி செலுத்தும் பழக்கம் உருவாகிவிட்டால் பிறகு அல்லாஹ் மேலும் அதிகமாக அருள் செய்கின்றான். மேலும் இந்த அருட்களை கண்டு ஒரு உண்மையான நம்பிக்கையாளர் தியாகங்கள் செய்வதற்கு தயாராகவும் இருக்கின்றார். செய்யவும் செய்கின்றார். இன்றைய காலகட்டத்தில் இந்த கருத்தை பற்றிய உண்மையான அறிவு நாம் அஹ்மதிகளுக்கு இருக்கின்றது. அவர்களுக்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்களின் காலமும் இருக்கின்றது. மேலும் அன்னாரின் உண்மை அடியாரின் காலமும், முன்மாதிரியும் இருக்கின்றது.**

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 4.9.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஒரு உலகவாதியிடம் ஒருவரில் உண்மையான இறையச்சம் உருவாகிவிட்டால் அவருக்கு இம்மை மற்றும் மறுமையின் அனைத்து அருள்களும் கிடைத்து விடுகின்றன என்று கூறப்பட்டால் நிச்சயமாக அவர் இவைகள் அனைத்தும் வீணான விஷயங்களாகும் என்றே கூறுவார். மேலும் மார்க்கத்தின் பெயரில் தம்மைச்சுற்றி ஒரு கூட்டத்தை ஒன்று சேர்ப்பதற்காக மக்கள் இவ்வாறு பேசுகின்றனர் என்று கூறுவார். இன்றைய நாட்களில் மார்க்கத்தின் பெயரில் சிலர் இதுபோன்ற விஷயங்களை பேசுகிறார்கள் என்பதும் சரிதான். மேலும் அவற்றில் அவர்களின் சுயநலம் இருக்கின்றது. ஆனால், அவர்களிடம் இறையச்சம் இருப்பதில்லை. மேலும் அவர்களைப் பின்தொடர்ந்து செல்பவர்களிடமும் இறையச்சம் இருப்பதில்லை. ஆனால், இதற்கு நேர்மாற்றமாக நபிமார்கள் மற்றும் அவர்களின் ஜமாஅத்துகள் உண்மையான போதனைகளின்படி நடக்கக்கூடிய மக்கள் இறையச்சம் பற்றிய உண்மையான ஞானம் கொண்டுள்ளனர். இந்த உலகில் இருந்து கொண்டு உலக வியாபாரங்களில் இருந்தும் கூட இறையச்சத்தை தேடுகின்றனர். மேலும் இறையச்சத்தின்படி நடக்கின்றனர்.

எனக்கு நூற்றுக்கணக்கான கடிதங்கள் வருகின்றன. அவைகளில் அல்லாஹ் எங்களிலும், எங்களின் சந்ததிகளிலும் இறையச்சத்தை உருவாக்குவானாக என்பதை வெளிப்படுத்துகின்றனர். இந்த மாற்றம் அவர்களிடம் உண்மையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டது மற்றும் தங்களுடைய பைஅத் உடன்படிக்கையை பூர்த்தி செய்யும் உணர்வு இருக்கின்ற காரணத்தினால் ஆகும். இந்த விருப்பம் மற்றும் இறைவனோடு தொடர்பு மற்றும் அவன் மீதுள்ள அச்சமும், பயமும் அவர்களை உலகப் பொருட்களிலிருந்து கவலையற்றவர்களாக ஆக்கியிருக்கின்றது. ஆனால், அவர்கள் உலகின் அருட்களிலிருந்து விலக்கப்பட்டவர்களாக இல்லை. அல்லாஹ் நபிமார்களுக்கும் தன்னுடைய அருள்களை வழங்குகின்றான். மேலும் அவர்களை உண்மையான முறையில் ஏற்றுக் கொண்டவர்களுக்கும் மார்க்கத்தின்படி நடப்பவர்களுக்கும் இந்த உலக அருள்களை வழங்குகின்றான். சில சமயம் சில தற்காலிக கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆனால், பிறகு அல்லாஹ்வினுடைய அருள் கிடைக்கின்றது. நிலைமை சீராக ஆகிவிடுகின்றது. இதே போன்று இறையச்சம் உடையவர்களில் போதுமென்ற மனமும் இருக்கின்றது. இந்த திருப்தியின் காரணமாக அவர்கள் சிறிய கஷ்டங்களை சகித்தும் கொள்கின்றனர். பிறகு அல்லாஹ்வினுடைய அருள் வருகின்றது. மேலும் அந்த அருட்களை வெளிப்படுத்தவும் செய்கின்றனர். பிறகு அல்லாஹ் அவர்களுக்கு வழங்குபவற்றிலிருந்து அவைகள் குறைவாக இருந்தாலும் இறையச்சமுடையவருக்கு அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் பழக்கம் இருக்கின்றது. இறைவனுக்கு நன்றி செலுத்தும் பழக்கம் உருவாகிவிட்டால் பிறகு அல்லாஹ் மேலும் அதிகமாக அருள் செய்கின்றான். மேலும் இந்த அருட்களை கண்டு ஒரு உண்மையான நம்பிக்கையாளர் தியாகங்கள் செய்வதற்கு தயாராகவும் இருக்கின்றார். செய்யவும் செய்கின்றார். இன்றைய காலகட்டத்தில் இந்த கருத்தை பற்றிய உண்மையான அறிவு அஹ்மதிகளாகிய நமக்கு இருக்கின்றது. அவர்களுக்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்களின் காலமும் இருக்கின்றது. மேலும் அன்னாரின் உண்மை அடியாரின் காலமும், முன்மாதிரியும் இருக்கின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த கருத்தை எடுத்துக் கூறியவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: பாருங்கள் ! மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து அனைத்தையும் பறித்து விட்டார்கள். மேலும் அதேபோல் சஹாபாக்களிடமிருந்தும் பறித்து விட்டார்கள். ஆனால், இறைவனுக்கு எதிரில் அவர்கள் வேறெதையும் பொருட்படுத்தவில்லை. இறுதியில், இறைவன் அவர்களுக்கு அனைத்தையும் வழங்கினான். இதே போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இறைவனுக்காக அனைத்தையும் துறந்தார்கள். மேலும் தன்னுடைய குடும்பத்தின் பாதி சொத்துக்களுக்கு அன்னார் எஜமானராக இருந்தும் அன்னாரின் மதனி அன்னார் இலவசமாக உண்ணக்கூடியவர் என்று கருதி வந்தார். மிக அதிக கஷ்டம் இருந்தது. இருந்தும் அல்லாஹ் அன்னாருக்கு அனைத்தையும் வழங்கினான்.

அன்னார் இந்த நிலைமையை இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னுடைய கவிதை வரிகளில் கூறுகின்றார்கள். லஃபாசாத்துல் மவாயிதி கான உகுலி வ சிர்துல் யவ்ம மித்ஆமல் அஹாலி அதாவது ஒரு காலத்தில் நான் பிறரின் எஞ்சிய துண்டுகளிலிருந்து வாழ்க்கையை கழித்து வந்தேன். ஆனால், இப்போது அல்லாஹ் ஆயிரக்கணக்கான மக்கள் எனது உணவு விரிப்பிலிருந்து உணவு உண்கின்ற நல்வாய்ப்பை வழங்கி இருக்கின்றான். இன்று

நாம் அன்னாரின் ஆரம்ப காலத்தையும் இறுதி காலத்தையும் பார்க்கும் போது நிச்சயமாக இதன் மூலம் அஹ்மதிகளாகிய நம்முடைய ஈமான் அதிகமாகின்றது.

இந்த நிலைமையை மேலும் விவரித்தவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பிறந்த போது அன்னாருடைய தாய், தந்தை அன்னாரின் பிறப்பில் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். ஆனால், அன்னாருடைய வயது அதிகமான போது மேலும் அன்னாரிடம் உலக ஆர்வமின்மை உருவான போது அன்னாரினுடைய தந்தை இந்த நிலைமையைப் பார்த்து, நம்முடைய மகன் எதற்கும் தகுதியானவன் அல்ல என வருந்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை கூறினார்கள். இதற்கு முன்பும் நான் அதை கூறியிருக்கின்றேன். அன்னாரிடம் ஒரு சீக்கியர் நாங்கள் இரு சகோதரர்கள் ஆவோம். நாங்கள் மிர்ஸா சாஹிபிடம் சென்ற போது அதாவது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவர்களிடம் சென்ற போது ஒரு முறை அவர்கள் என்னுடைய தந்தையிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக நீங்கள் அவரிடம் செல்கின்றீர்கள். அவருக்கு புரிய வையுங்கள் என்று கூறினார்கள். அவர் கூறுகிறார். நான் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களிடம் சென்று உங்களுடைய தந்தை தன்னுடைய இளைய மகன் அவரின் மூத்த சகோதரரின் வருமானத்தில் வாழ்வார் என்றும் எந்த பணியும் செய்வதில்லை என்று அஞ்சுகிறார்கள் என்றும் அவர் என்னுடைய வாழ்நாளிலேயே ஏதாவது பணியை செய்ய வேண்டும் என அவரிடம் கூறுங்கள். நான் அவருக்கு நல்ல வேலை கிடைப்பதற்கு முயற்சி செய்கின்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தந்தையினுடைய வருத்தத்தின் வெளிப்பாட்டை அந்த சீக்கியர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் வெளிப்படுத்தி நீங்கள் ஏன் உங்களுடைய தந்தையின் பேச்சை கேட்க மறுக்கின்றீர்கள் என்று கூறிய போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், என்னுடைய தந்தை தேவையில்லாமல் கவலைப்படுகிறார்கள். அவர்கள் என்னுடைய எதிர்காலத்தைப் பற்றி ஏன் கவலைப்படுகின்றார்கள். நான் எவனுக்கு பணியாற்ற வேண்டுமோ அவனது பணியில் சேர்ந்து விட்டேன். கூறுகிறார். நாங்கள் திரும்பி வந்து மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிபிடம் இந்த அனைத்து விஷயங்களையும் கூறினோம். அதற்கு மிர்ஸா சாஹிப் அவர்கள், அவர் இவ்வாறு கூறியிருந்தால் பிறகு பரவாயில்லை. ஏனென்றால் அவர் பொய் பேசமாட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களினுடைய ஆரம்பமாகும். பிறகு இப்போது முடிந்து விடவில்லை. நமக்கு தெரிகின்ற தற்காலிக முடிவு என்னவென்றால் அன்னாரின் மரணத்தின் போது ஆயிரக்கணக்கான அன்னாரின் மீது அர்ப்பணமாகக் கூடியவர்கள் இருந்தார்கள். அன்னாருடைய ஆரம்பம் எவ்வளவு சிறியதாக இருந்தது. ஆனால் அன்னாருடைய முடிவு எப்படி இருந்தது என்றால் தொண்டாற்றக்கூடியவர்களைத் தவிர லங்கரில் தினசரி 200 – 250 பேர் உணவு உண்டு வந்தனர். ஆரம்ப காலத்தில் அன்னாரை அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திப்பதற்காக யாரேனும் வந்தால் அன்னார் தனது மதனியிடம் உணவு வழங்குமாறு கூறி அனுப்பும் போது மதனி கூறுகிறார். இவர் உண்கிறார். ஆனால், எவ்வித வேலையும் செய்வதில்லை என்பார். அதனால் அன்னார் தன்னுடைய உணவை அந்த விருந்தாளிக்கு கொடுத்து விடுவார்கள். மேலும் தான் பட்டினியாக இருப்பார்கள். அல்லது சிறிதளவு கொண்டைக்கடலையை சாப்பிட்டுவிட்டு வாழ்க்கையை கழிப்பார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனுடைய நியதி என்னவாயிற்று என்றால் எந்த பெண் அன்னாரை அந்த நேரத்தில் இழிவான பார்வையுடன் பார்த்தாரோ அவர் பிறகு எனது கைகளில் அஹ்மதிய்யத்தில் இணைந்தார். சுருக்கமாக, அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஒரு பணி ஆரம்பிக்கப்படும் போது அதன் ஆரம்பம் பெரிதாக தெரிவதில்லை. அதனுடைய முடிவில் உலகம் வியப்படைகின்றது. இன்றும் நாம் பார்க்கின்றோம். காதியான் மட்டுமின்றி காதியானுக்கு வெளியேயும் உலகின் பல்வேறு நாடுகளிலும் அன்னாரின் லங்கர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த காலத்தில் அநேகமாக இரண்டு மூன்று அடுப்புகளில் ரொட்டி சமைக்கப்பட்டிருக்கலாம். லங்கர் செயல்பட்டுக் கொண்டிருந்தது. இன்று நாம் பார்க்கின்றோம். அன்னாருடைய லங்கரில் ரொட்டி போடுவதற்கான எந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. காதியானிலும், ரப்வாவிலும், இங்கு லண்டனிலும் இலட்சக்கணக்கான ரொட்டிகள் ஒரே நேரத்தில் சமைக்கப்படுகின்றன.

ஆக, ஒரு விருந்தாளி வந்த போது அன்னார் தன்னுடைய உணவை அவருக்கு வழங்கி தான் பட்டினியாக இருந்த காலம் எப்படிப்பட்ட காலமாக இருந்தது. இன்று உலகின் பல்வேறு நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் அன்னாரின் உணவு விரிப்பிலிருந்து உணவு உண்ணும் இந்த காலம் எங்கிருக்கிறது. இதுவும் கூட இறுதியல்ல. இந்த லங்கர் உலகின் பல்வேறு நாடுகளில் பரவ வேண்டியிருக்கிறது. இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் அன்னாரின் உணவு விரிப்பிலிருந்து உணவு உண்ண வேண்டியிருக்கிறது. இதேபோல் இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் அன்னாரை ஏற்றுக் கொண்ட பிறகு இறையச்சத்தில் முன்னேறுவதும் இருக்கின்றது. இன்று உலகை சம்பாதிக்கக்கூடிய அஹ்மதிகளில் நமக்கு தெரிகின்ற தியாகத்தின் தரத்திற்கும் இது முடிவு அல்ல. இதிலும் இன்ஷா அல்லாஹ் அதிகரிப்பு ஏற்பட்டுக் கொண்டே செல்லும். ஆக, ஒரு சிந்திக்கக் கூடியவர் லங்கரின் அமைப்பை மட்டுமே பார்த்தால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களினுடைய ஆரம்ப காலத்தை முன் வைத்து பார்த்தால் இதுவே அன்னாரின் உண்மைத்துவத்திற்கு ஒரு ஆதாரமாகவும் ஆகிவிடுகின்றது. மிகப்பெரிய அடையாளமாகும். நிச்சயமாக இது நமது ஈமான் அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கின்றது. இந்த அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதற்கு ஜமாஅத் மக்களிடம் உருவாகி இருக்கின்ற பொருள் தியாக உணர்வும் இறையச்சத்தின் விளைவினாலாகும் என்பதையும் காண முடிகின்றது. இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு இணைந்ததால் நம்மில் உருவாகி உள்ளது. அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவருக்கும் உண்மையான இறையச்சத்தை உருவாக்குவதற்கான கவனத்தை மேலும் அதிமகாக்குவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு கோணங்களையும் மேலும் சில சம்பவங்களையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அதிலிருந்து மிக நுட்பமான கருத்துக்களை எடுக்கின்றார்கள். அதுவும் நமது ஈமான் அதிகரிப்பதற்கு காரணமாகின்றது. ஞானத்தில் முன்னேற்றம் ஏற்படுகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உணவு உண்ணும் முறை பற்றி கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களினுடைய உணவு உண்ணும் முறை முற்றிலும் மாறுபட்டதாகும். வேறு எவரையும் அதே போன்று உணவு உண்ண நான் கண்டதில்லை. அன்னார் முதலில் ரொட்டியிலிருந்து ஒரு துண்டை தனியாக எடுப்பார்கள். அதாவது சிறிய சப்பாதியிலிருந்து ஒரு துண்டை தனியாக எடுப்பார்கள். பிறகு அதை குவளமாக ஆக்குவதற்கு முன்பு அன்னார் விரல்களால் அதை தூள்தூளாக ஆக்குவார்கள். மேலும் வாயில் சுப்ஹானல்லாஹ். சுப்ஹானல்லாஹ் என்றும் கூறிக் கொண்டே இருப்பார்கள். பிறகு அதிலிருந்து ஒரு சிறிய துகளை எடுத்து குழம்பில் தொட்டு வாயில் வைப்பார்கள். இந்த பழக்கம் அன்னாரிடம் எந்த அளவுக்கு மிகைத்திருந்தது என்றால் பார்க்கக்கூடியவர் வியப்பார்கள். மேலும் சிலர் அன்னார் ரொட்டியிலிருந்து ஹலாலான துகள்களை தேடுகிறார்கள் என எண்ணினர். ஆனால், உண்மையில் இதற்கு என்ன காரணம் என்றால் நாமோ உணவு உண்கின்றோம். இறைவனுடைய மார்க்கம் பிரச்சனைகளால் துடிதுடித்துக் கொண்டிருக்கிறது என்ற உணர்வு இருந்தது. ஒவ்வொரு துண்டும் அன்னாரின் கழுத்தில் சிக்கியது. அன்னார் சுப்ஹானல்லாஹ். சுப்ஹானல்லாஹ் என்று கூறி அல்லாஹ்விடம் நீ எங்களோடு இதை வைத்துவிட்டாய். அதாவது உணவு உண்பது மனித தேவையாக இருக்கிறது. ஆனால், மார்க்கம் கஷ்டத்தில் இருக்கும் போது இது நமக்கு ஒருபோதும் ஆகுமானதல்ல என்று மன்னிப்பு கோருவதைப் போன்று இருக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் சாப்பிடுவது ஒரு போரிடுதலாக தென்படும். இஸ்லாத்தின் மற்றும் மார்க்கத்தின் உதவிக்காக எழுகின்ற தூய்மையான உணர்வுகளுக்கும் மேலும் இறைவன் தரப்பிலிருந்து இயற்கை எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட தேவைகளுக்கும் நடுவே நடக்கின்ற ஒரு போராக இருந்தது. அதாவது மார்க்கத்திற்கு உதவுவதற்காக அன்னார் கொண்டிருந்த உணர்வு மற்றும் மனித தேவைகள் அதாவது சாப்பிடுவது மனிதத் தேவையாகும். நீர் அருந்துவது மனிதத் தேவையாகும் இவைகளுக்கு நடுவே ஓர் போர் நடந்தது. அன்னார் உணவு உண்பதும் கூட ஓர் நிர்பந்தமாக இருந்தது. மார்க்கதின் உதவியே அன்னாரின் உண்மையான கவலையாக இருந்தது. இஸ்லாத்தின் முன்னேற்றம் அன்னாரின் கவலையாக இருந்தது.

ஆக,ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த முன்மாதிரி நம்மை நாம் அல்லாஹ்வினுடைய அருட்களை பயன்படுத்தும் போது அதற்கு நன்றி செலுத்த வேண்டும். அவனை புகழ வேண்டும். அதே வேளையில் மார்க்கத்தின் நிலைமை பற்றிய வேதனையையும் உணர வேண்டும். மேலும், நாம் எவ்வாறு மார்க்கத்தை பரப்புவதற்காக மார்க்க பிரச்சாரத்தில் பங்கு பெற வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டுகின்றது. பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு சாப்பிடும் நடை இறைவனை புகழக்கூடிய விஷயம் தொடர்பான மேலும் விளக்கமாக இருக்கின்றது அதாவது திருக்குர்ஆனுடைய இந்த வசனத்தின் அதாவது யுஸப்பிஹு லில்லாஹி மாஃபிஸ் ஸமாவாத்தி வமா ஃபில் அர்ழ். அதாவது வானம் மற்றும் பூமியின் அனைத்து பொருட்களும் இறைவனைப் புகழ்கின்றன என்ற கருத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுக்கின்றார்கள்.

இதே போன்று இறைவன் யுஸப்பிஹு லில்லாஹி மாஃபிஸ் ஸமாவாத்தி வமா ஃபில் அர்ழ் அதாவது வானம் மற்றும் பூமியிலுள்ள அனைத்தும் இறைவனைப் புகழ்கின்ற என்று கூறுவதன் பொருள் என்னவென்றால் நீங்கள் அந்த இறைவனை புகழ்தலை கேளுங்கள் என்பதாகும். ஆக, இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் இந்த தஸ்பீஹ் எப்படிப்பட்டதென்றால் இதை நாம் கேட்கவும் முடியும். ஒருவகையான கேட்டல் மிகவும் குறைந்த தரத்தை உடையதாகும். இன்னொன்று உயர் தரத்தை உடையதாகும். உயர் தரத்தை உடைய கேட்டல் அதே போன்ற கண்களும் காதுகளும் இருக்கின்ற போது அது சாத்தியமாகும். எனவே தான் ஒரு நம்பிக்கையாளர் அவர் சாப்பிட ஆரம்பிக்கும் போது பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று கூற வேண்டும். சாப்பிட்டு முடிக்கும் போது அல்ஹம்துலில்லாஹ் என்று கூற வேண்டும். ஆடை அணியும் போதோ அல்லது வேறு ஏதேனும் காட்சியை காணும் போது அதற்கேற்ப இறைவனை புகழ வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆக, ஒரு நம்பிக்கையாளரின் தஸ்பீஹ் செய்தல் என்றால் என்ன ? அவர் இந்த பொருட்கள் செய்கின்ற தஸ்பீஹை சான்று பகரக்கூடியதாகும். துணிக்கான தஸ்பீஹ், சாப்பிடுவதற்கான தஸ்பீஹ் மேலும் பிற பொருட்கள் தஸ்பீஹ் செய்வதை சான்று பகர்கின்றது. மனிதன் சாப்பிடும் போது பிஸ்மில்லாஹ் என்று கூறுகின்றான். சாப்பிட்டு முடித்துவிட்டு அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுகின்றான். துணி அணியும் போது துஆ செய்கின்றான். அல்லாஹ்வை நினைவு கூர்கின்றான். இவைகள் அனைத்தும் மனிதன் தான் தான் செய்கின்றான். ஆனால். உண்மையில் இந்த தஸ்பீஹ் அந்த பொருட்களின் மூலமாக கூறப்படுகிறது. அவைகளை பார்த்து மனிதன் நன்றி செலுத்தும் போது இந்த தஸ்பீஹ் அந்த பொருட்கள் தரப்பிலிருந்து கூறப்படுவதாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். இதன்படி அமல் செய்பவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? அவர்கள் இரவு பகல் உண்கின்றனர். குடிக்கின்றனர். மலைகளை கடந்து செல்கின்றனர். நதிகளை காண்கின்றனர். பசுமைகளை கண்டு களிக்கின்றனர். மரங்களையும் வயல்களையும் அசையக் காண்கின்றனர். பறவைகள் சப்தமிடுவதை கேட்கின்றனர். ஆனால் அவர்களினுடைய உள்ளத்தில் என்ன தாக்கம் ஏற்படுகிறது ? அவர்களினுடைய உள்ளத்திலும் இவைகளுக்கு எதிராக தஸ்பீஹ் எழுகிறதா ? மனிதன் ஏதேனும் ஒன்றிற்கு செலுத்துகின்ற நன்றி அதாவது

இறைவனுடைய வல்லமையை பார்க்கும் போது சுப்ஹானல்லாஹ் என்று கூறுகின்றான். மனிதன் கூறுகின்ற தஸ்பீஹ் அதாவது இறைவனை புகழ்தல் அந்த பொருட்களிலிருந்து வருகின்றதாகும். அது மனிதனின் நாவிலிருந்து வெளிப்படுகின்றது. இந்த கருத்தை புரிய வேண்டிய தேவை இருக்கின்றது. ஆக, தஸ்பீஹினுடைய இந்த ஒரு நடையையும் நாம் மேற்கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். மாறாக, இதுபோன்ற தஸ்பீஹ் நம்முடைய பழக்கமாக மாறிவிடுவதே தக்வா ஆகும்.

இந்த காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுப்பவர்களின் வாயை அடைப்பதற்கும் இஸ்லாத்தின் அழகை வெளிப்படுத்துவதற்காககவும் அனுப்பி இருக்கின்றான். இது தொடர்பாகவும் ஒரு சம்பவத்தை கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பள்ளிவாயிலில் அமர்ந்திருந்தார்கள். ஒரு கிருத்தவர் வந்தார். நீங்கள் திருக்குர்ஆனுடைய மொழி மொழிகளுக்கெல்லாம் தாய் என்று கூறுகின்றீர்கள். ஆனால் மேக்ஸ் முல்லர் போன்றவர்கள் எந்த மொழி சுருக்கமானதாக இருக்குமோ அதுவே மொழிகளுக்கெல்லாம் தாயாக இருக்கும் என்று எழுதியுள்ளார். பிறகு மக்கள் அதை மெது மெதுபாக பரப்பி விடுகின்றனர் என்று கூறினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நாம் மேக்ஸ் மோலருடைய இந்த வழிமுறையை அதாவது மொழிகளுக்கெல்லாம் தாய் சுருக்கமானதாக இருக்கும் என்பதை ஏற்கவில்லை. இருக்கட்டும். விவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு நாம் இந்த வழிமுறையை ஏற்றும் கொள்வோம். அரபி மொழி இந்த தரத்தை உடையதாக இருக்கின்றதா ? இல்லையா? என்று பார்ப்போம். அந்த நபர் ஆங்கில மொழி அரபி மொழியை விட மிகவும் உயர்வானதாகும் என்றும் கூறியிருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆங்கிலத்தை அறிந்திருக்கவில்லை. ஆனால் அன்னார் கூறினார்கள். இப்போது ஆங்கிலத்தில் என்னுடைய தண்ணீர் என்பதற்கு என்ன கூறுவார்கள். அதற்கு அவர் My Water எனக் கூறினார். அதற்கு அன்னார் அரபி மொழியில் இதற்கு மாயி என்று மட்டுமே கூறுவார்கள் எனக்கூறினார்கள். இவ்வாறு கூறினாலே அதன் பொருள் வந்து விடும். இப்போது My Water என்பது சுருக்கமாக இருக்கின்றதா ? அல்லது மாயி என்பது சுருக்கமாக இருக்கிறதா என்பதை நீங்களே சொல்லுங்களேன் என்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆங்கிலம் அறிந்திருக்கவில்லை. ஆனால் இறைவன் அன்னாருடைய நாவிலிருந்து எப்படிப்பட்ட வார்த்தையை வர வைத்தான் என்றால் ஆட்சேபனை செய்யக்கூடியவர் தானாகவே சிக்கிக் கொண்டார். மேலும் அவர் வெட்கப்பட்டு பதில் இல்லாதவராக ஆகிவிட்டடார். பிறகு அரபி மொழி தான் குறுகியதாக இருக்கிறது என்று கூறினார். திருக்குர்ஆனினுடைய நிலைமையும் இதுவேயாகும்.

அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களை எதிர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பான் என அன்னாரிடம் வாக்குறுதி அளிக்கிறான். அதாவது எப்போதும் திருக்குர்ஆனை படிக்கக்கூடிய மக்களை அவன் உருவாக்கிக் கொண்டு இருப்பான. அவர்களுக்கு அத்தோடு உண்மையான நேசம் கொண்டவர்களாக இருப்பார்கள். மேலும் அதற்கு விளக்கம் அளிக்கக்கூடியவர்கள் இருப்பார்கள். அவர்கள் எதிரிகளின் தாக்குதல்களுக்கு அவர்களினுடை வாய்கள் அடைபடக்கூடிய அளவிற்கு பதிலளிப்பார்கள். பிறகு திருக்குர்ஆனில் எப்படிப்பட்ட ஒரு ஆற்றலை வைத்துள்ளான் என்றால் ஆட்சேபனை செய்யக்கூடியவர் என்ன ஆட்சேபனை செய்தாலும் அதற்குரிய பதில் அதில் இருக்கின்றது.

ஆக, இன்றும் எவர்கள் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றார்களோ அவர்களின் வாய்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கிய அறிவிலிருந்து நம்மால் அடைக்க முடியும். இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் தன்னுடைய மார்க்கத்திற்கு ஆதரவாக அடையாளங்களையும் காட்டுகின்றான். ஆதாரங்களையும் கூறுகின்றான். அறிவை பெற ஆரம்வமுடைய சிலருடைய உள்ளங்களையும் திறந்து விடுகின்றான். ஆனால் சிலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால் குறைவான அறிவு இருந்தும் ஆலிமாக வேண்டும் என்ற ஆர்வத்தில் தேவையில்லாத விஷயங்களை பேசி விடுகின்றனர். அதன் மூலமாக சில சமயம் கஷ்டங்கள் ஏற்பட்டு விடுகின்றன. மாறாக, எதிரிகளுக்கு எள்ளி நகையாட சந்தர்ப்பம் கிடைத்து விடுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இப்படிப்பட்டவர்கள் இரு பக்கமும் எல்லை மீறி விடுகின்றனர். இவர்களுக்கு எவ்விதவொரு அடிப்படையும், சட்டமும் இருப்பதில்லை. உண்மையான வழிமுறை நடுநிலையைப் பேணுவதாகும். மனிதன் மாற்றத்தை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும். ஆனால் மாற்றத்தை ஏற்படுத்துவது இறைவனின் கைகளில் இருக்கின்றது. அவன் எப்போது விரும்புகின்றானோ மாற்றத்தை ஏற்படுத்துகின்றான். அவன் மாற்றத்தை ஏற்படுத்த நினைத்தால் பிறகு உலகால் அதை தடுத்து நிறுத்த முடியாது.

பிறகு ஒரு சிலரின் தவறான சிந்தனைகள் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஒருவர் காதியான் வந்தார். அவர் மிர்ஸா சாஹிபிற்கு நீங்கள் இப்ராஹீமாக இருக்கின்றீர்கள், நூஹாக இருக்கின்றீர்கள், மூஸாவாக இருக்கின்றீர்கள், ஈஸாவாக இருக்கின்றீர்கள், முஹம்மதாக இருக்கின்றீர்கள் என்று கூறப்படுகின்றதென்றால் என்னைப் பார்த்தும் இறைவன் எப்போதும் நீ முஹம்மதாவாய் என்று கூறுகிறான் எனக் கூறினார். மக்கள் அவருக்கு புரிய வைத்தனர். அதற்கு அவர் இறைவனுடைய ஓசை எனக்கு வருகின்றது. அவனே என்னைப் பார்த்து நீ முஹம்மதாவாய் என்று கூறுகின்றான். உங்களுடைய இந்த ஆதாரங்கள் என்மீது எந்த தாக்கத்தை ஏற்படுத்தி விட முடியும் என்று கூறினார். எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை. மக்கள் அவருக்கு புரிய வைத்து புரிய வைத்து களைப்படைந்த போது இவரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அழைத்துச் செல்வது சிறந்ததாக இருக்கும் எனக் கருதினர். எனவே அவர் ஹுஸூர் அவர்களிடம் அழைத்து வரப்பட்டார். அவர் இறைவன் என்னைப் பார்த்து நீ முஹம்மதாவாய் என்று கூறுகிறான் என்று கூறினார். அதற்கு அன்னார் இறைவன் என்னைப் பார்த்து நீ ஈஸாவாவாய்

என்று கூறுகின்ற போது ஈஸாவினுடைய பண்புகளை எனக்கு வழங்குகின்றான். நீ மூஸாவாவாய் என்று கூறுகின்ற போது மூஸாவினுடைய அடையாளங்களை எனக்கு வழங்குகின்றான். அல்லாஹ் உங்களைப் பார்த்து எப்போதும் நீ முஹம்மதாவாய் என்று கூறுகின்றான் என்றால் அவன் உங்களுக்கு திருக்குர்ஆனின் நுட்பமான ஞானங்களையும் வழங்குகின்றானா ? இல்லையா? என்று கேட்ட போது, எதுவுமே வழங்குவதில்லை என்று பதில் கூறினார்.

அப்போது அன்னார் பாருங்கள். இதுதான் உண்மையாளர் மற்றும் பொய்யருக்கு இடையேயுள்ள வேறுபாடாகும் என்று கூறினார்கள். ஒரு மனிதர் ஒருவரை உண்மையான முறையில் விருந்தாளியாக ஆக்குகிறார் என்றால் அவருக்கு சாப்பிடுவதற்கு கொடுக்கின்றார். ஆனால் எவரிடமாவது அவர் கேலி செய்தால் அவர் அந்த நபரை அழைத்து அவருக்கு முன்பு காலி பாத்திரங்களை வைத்து விட்டு இதில் பிரியாணி மற்றும் இனிப்புச்சோரு உள்ளது என்று கூறுகின்றார். இறைவன் கேலி செய்வதில்லை. ஷய்த்தான் தான் கேலி செய்கின்றான். நீங்கள் முஹம்மது என்று கூறப்பட்டால் பிறகு திருக்குர்ஆனுடைய உண்மைகள் நுட்பமான ஞானங்கள் வழங்கப்படவில்லை என்றால் அவ்வாறு கூறக்கூடியவன் ஷய்த்தானாவான். இறைவன் அல்ல. இறைவன் ஒரு விஷயத்தை கூறுகின்றான் என்றால் அதற்கேற்ப பொருட்களையும் மனிதனுக்கு முன்பு வைத்து விடுகின்றான். உங்களுக்கு முன் ஏதேனும் பொருட்கள் வைக்கப்படவில்லை என்றால் அவ்வாறு கூறக்கூடியவன் ஷய்த்தானாவான் என்பதை நிச்சயமாக நீங்கள் எண்ணிக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

உண்மை என்னவென்றால் சிலர் சில கனவுகளின் காரமணாக தப்பெண்ணத்தில் மூழ்வி விடுகின்றனர். மிகப்பெரும் பெரும் வாதங்கள் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். அவர்கள் உண்மையில் ஷய்த்தானின் தாக்கத்தின் கீழ் இருப்பவர்கள் ஆவர். இறைவன் ஒருவருக்கு ஒன்றை வழங்கும் போது அதனுடைய பொழிவையும் காட்டுகின்றான். தன்னுடைய ஆதரவையும் வெளிப்படுத்துகின்றான். அடையாளங்கள் வெளிப்படுகின்றன. அல்லாஹ்வினுடைய செயல் அத்தாட்சி அத்தோடு பணி செய்கின்றது. இதையே நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு நடக்கக் கண்டுள்ளோம். இவ்வாறே அன்னாரினுடைய முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு சாதகமாக நிறைவேறியதையும் கண்டோம். இதே போன்று அஹ்மதிய்யா கிலாஃபத் நிலைபெறும் என்று அன்னார் வழங்கிய நற்செய்திக்கு அல்லாஹ்வினுடைய செயல் அத்தாட்சி முழுமையடைந்ததை நாம் கண்டோம். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியின் ஈமானிலும் முன்னேற்றத்தை வழங்குவானாக. மேலும் இந்த விஷயங்களை புரியக் கூடியவர்களாக ஆவார்களாக.

தொழுகைக்கு பிறகு ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதி அமத்துல் பாரி சாஹிபா உடையதாகும். 31 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 1, 2015 ஆகிவற்றிற்கு நடுப்பட்ட இரவில் 87 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

மதிப்பிற்குரிய அம்மத்துல் பாரி சாஹிபா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகன்வழி பேத்தியும், ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகளும், நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களின் மகள்வழி பேத்தியும் ஆவார்கள். செய்யதா அம்மதுல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா மற்றும் நவாப் அப்துல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் மருமகளும் ஆவார்கள். இவர்களினுடைய கணவர் மியான் அப்பாஸ் அஹ்மது கான் சாஹிப் மர்ஹூம் ஆவார்கள். இவர்கள் என்னுடைய மாமியும் ஆவார்கள். 1927 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் காதியானில் பிறந்தார்கள். அல்லாஹ் இவர்களுடைய பதவியை உயர்த்துவானாக. இவர்களுடன் மன்னிப்புடன் நடந்து கொள்வானாக. ஆமீன்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 4.9.2015
Tamil Translation : Moulavi. M.B. Tahir Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516